# இலங்கையின் பழங்குடி இனத்தவர்களான வேடுவர் சமூகத்தின் மொழியும், பண்பாட்டம்சங்களும்

# The language and cultural aspects of the Veddah community, the indigenous people of Sri Lanka

**து. யுஜந்தன்** / T. Yujanthan[1]

**Abstract**

The Vedda community, considered to be the indigenous or aboriginal people of Sri Lanka, continues to live in small groups across various parts of the island. Their lifestyles are unique. Although Sri Lanka is seen as a multi-ethnic country where different communities live together, there is still substantial evidence that the Veddas were the island's earliest inhabitants. References about them can be found in Mahavamsa, Dipavamsa, Nadukattu Paravani inscriptions, Sathiyadheiva inscriptions, and Kulavirutthu inscriptions. Furthermore, the Nadukattu Paravani inscriptions, which belong to the literary genre, indicate their development among the Tamils during the medieval period. For many years, the indigenous people of Sri Lanka have lived alongside the Tamil community, and thus they have continuously faced pressures of assimilation—both voluntary and forced. This has led to the erosion of their native language, culture, and distinct identity as an indigenous people. The erasure of identity has been reinforced structurally and institutionally, and historical records concerning them have never recognized the Veddas as part of the Tamil identity in Sri Lanka. Consequently, this process of assimilation has resulted in the loss of important socio-cultural rights of the Vedda community. Based on this, the present study focuses on the linguistic structures of the Vedda community, the diversity within their language, and their cultural identity and heritage. The article aims to center discussion on the socio-cultural dimensions of the Veddas as the indigenous people of Sri Lanka

Date of submission: 2025-09-10
Date of acceptance: 2025-09-28
Date of Publication: 2025-12-30
Corresponding author's Name:
T.Yujanthan
Email: thuraiyujanthan@gmail.com

**Keywords:** Indigenous people, Veddas, language, identity, origin, cultural aspects, structure, diversity, uniqueness, lifestyle features

## ஆய்வு அறிமுகம்

புராதன மனிதர்களின் எச்சங்கள் போன்று தனித்தனி குழுமங்களாக தனக்கேயுரித்தான பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கிக் கொண்டு ஒரு தொகுதியினர் விருத்தி பெற்ற நாடுகளிலும் ஏனைய விருத்தி பெறாத நாடுகளிலும் வாழ்கின்றனர். இவர்களையே மானிடவியலாளர்கள் மற்றும் சமுகவியலாளர்கள் பழங்குடிகள் (Tribes) என அழைத்து பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் அவர்களின்

[1]The author is a Lecturer in Social Sciences, Department of Social Studies, Open University of Sri Lanka-atticaloa Regional Centre. 0756809081, thuraiyujanthan@gmail.com

சமுதாய, பண்பாட்டு மொழி அமைப்புக்களை ஆராய்ந்து வருகின்றனர். இன்று இவ்வாறு வாழ்ந்துவரும் பழங்குடிகள் உலகில் சுமார் 70 நாடுகளில் 35 கோடி இருப்பதாக யுனெஸ்கோ அறிக்கை மதிப்பிட்டுள்ளது (சேதுராமன், ஆர் 2009). பழங்குடியினர் தொடர்பாக மஜிம்தார் (Majumthar) குறிப்பிடுகைளில் "குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் ஒரு இனம் தமக்காக குறித்த பெயரையும், மொழியையும், தொழிலையும் மற்றும் பணியில் சில விலக்குகளைக் கொண்டுள்ளதுடன் ஒருவர்க்கு ஒருவர் கட்டுப்பாடுடனும், பொருள்களைப் பரிமாறிக்கொண்டும் வாழும் பல குடும்பங்களின் தொகுதியே பழங்குடியாகும்" எனக் குறிப்பிடுகின்றார். பழங்குடிகள் சமூகத்தை பொறுத்தவரை குறிப்பிட்ட பகுதிக்கு மாத்திரமே தனித்துவமான சமூகமன்று எனக் குறிப்பிடும் உலக பழங்குடியினர் பாதுகாப்புக் குழுவான " Survival International" இன் இயக்குனர் சுபன் கோரி (Stephen Kori) மேலும் குறிப்பிடுகையில் இதுவரை வெளி உலகோடு சற்றும் தொடர்பே இல்லாத சுமார் நூறு பழங்குடி இனமானது உலகில் நிச்சயம் உண்டு என்று குறிப்பிடுகின்றார். இலங்கையினைப் பொறுத்தவரையில் முற்றிலும் வேறுபட்டவர்களாகவும் வித்தியாசமான பழக்கவழக்கங்களை பின்பற்றுபவர்களாகவும், வித்தியாசமான பழக்கவழக்கங்களை உடையோர்களாகவும் பழங்குடி என்ற சமூக அமைப்பினர் வாழ்ந்து வருகின்றனர் (Vijayathilaka, 1977), இவர்களை வேடுவர்கள், மராட்டியர்கள், குறவர்கள் என வேறுபட்ட பெயர்கள் கொண்டு அழைக்கின்றனர். இத்தகைய வம்சாவழியினர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவர்கள் என்றும் இந்தியாவே இவர்களது பிறப்பிடம் எனவும் பல ஆண்டுகளுக்கு முன் இலங்கையை வந்தடைந்தனர் எனவம் கூறப்படுகின்றது (சீனிவாச சர்மா 1977). இலங்கையில் இவர்கள் "அஹிங்குண்டயோ" (Ahikuntika) அல்லது "கூத்தாடி" (Kuthadi) என பல பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றனர் (குகபாலன், 2000), குறவர் என்ற சொல் "குன்றவர்" அல்லது மலையில் வாழும் மனிதன் எனப் பொருள்படும். குறிஞ்சி நில மக்கள் குறவர் என அழைக்கப்பட்டதாக பழந்தமிழிலக்கியங்கள் சான்றுபகர்கின்றன (பக்தவத்சல்பாரதி, 1990).

இலங்கையின் பழம்பெரும் தொகுப்பு நூலான புனித மகாவம்சத்தை மேற்கோள் காட்டி பௌத்தப் பிக்குகளும், இலங்கையின் பௌத்த மகாவம்சக் கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்களும், இலங்கையின் முதல் மன்னனாக கூறும் விஜயன் இலங்கை வந்தடைந்தப் பின் குவேனி எனும் இயக்கர் குலப்பெண்ணை திருமணம் செய்துகொண்டான். பின்பு இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்ததெனவும் அக்குழந்தைகள் வளர்ந்து சிலகாலங்களில் காடுகளில் வாழ்ந்தனர் என்றும், அவர்களின் வாரிசுகளே இன்றைய இலங்கை காடுகளில் வசிக்கும் வேடர்கள் என்றும் நம்மப்பட்டு வருகின்றது. நாட்டின் பழங்கால வரலாற்று நூல்களில் குறிப்பிடப்படும் இயக்கர், நாகர் என்னும் இரு இனங்களில் இவர்கள் இயக்கர் பழங்குடியினரின் மரபின் வழி வந்தவர்கள் என வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் இவர்களை சிங்கள மொழியில் "வெத்தா" என்று அழைக்கின்றனர். ஆனால் இவர்கள் தங்களை "வன்னியலா எத்தோ" (Wanniyala-Aetto) என்று குறிப்பிட்டுகொள்கின்றனர். இலங்கையின் பெரும்பான்மை இனங்களான சிங்களவர் தமிழர் ஆகிய மக்களிடம் இருந்து வேறுபட்டு காணப்பட்டாலும் அவர்களுடன் கலந்து வாழப் பழகிக்கொண்டல் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளை இவர்கள் பேசிவருகின்றனர். அதேவேளை ஆரிய மொழிகளின் சாயல் இவர்களது பேச்சில் காணப்படுகின்றன எனவும் மொழி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். வேடர்கள் தமது ஊடக மொழியாக தமக்கேயுரித்தான வேடுவ மொழியைக் கொண்டிருத்தனர். இந்த வேடர் மொழியானது இன்று முற்றாக அழியும் நிலையிலுள்ளது. தமது ஊடக மொழியினை கைவிட்டு பிற மொழிகளை கற்க வேண்டிய நிர்பந்தம், சூழ்நிலைக்கேற்ப பிற மொழிகளை இவர்கள் பேசி வந்தாலும் தமது தெய்வ வழிப்பாட்டு சடங்குகளில் தங்கள் வேடுவ மொழியை விட்டுக்கொடுப்பதில்லை.

குறிப்பாக இவர்களின் வாழ்வியல் கோலங்கள் தனித்துவமானவை. ஏனைய சமூகத்தினரின் வாழ்வியல் நடைமுறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இயற்கையோடு இணைந்த வாழ்வியல் முறைமைகளை கொண்டிருந்த இவர்களின் வாழ்வில் நவீன நாகரிகத்தின் வருகை, நகரமயமாக்கம், மக்கள் குடியேற்றம் காரணமாக இவர்கள் ஜீவனோபாயத்தின் உறைவிடமாக இருந்த காடுகள் அழிக்கப்பட்டன. இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் பழங்குடியினரான வேடுவ சமூத்தின் மொழிக் கட்டமைப்புக்கள், பண்பாட்டம்சங்கள் என்பவற்றின் தன்மைகள் இவை எதிர் நோக்கும் சவால்களை அறிந்து கொள்ளும் நோக்கோடு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்த வன்செயல்களின் தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்ந்து வந்த குறவர் சமூகம் பெருமளவில் பாதிக்கப்பட்டு உடைமைகளை இழந்து, பல உயிர்களை இழந்தும் புதிய இடங்களைத் தேடிப் புறப்பட்டனர். இத்தகைய நிலைகளில் இருந்து இச்சமூகத்தின் பழமையான மரபுகளை பாதுகாக்க வேண்டிய தேவை எமக்குள்ளது. மருவி வருகின்ற வேடர் சமூகத்தின் மொழி மற்றும் பண்பாட்டம்சங்களை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

ஆரம்பகாலங்களில் இவர்கள் பயன்படுத்திய மொழிக் கட்டமைப்புக்கள், தொடர்பாடல் முறைகள், அவற்றின் தன்மைகள் என்பவற்றிலும், சமூகப் பண்பாட்டம்சங்களின் பாரம்பரிய வாழ்க்கை முறைகளில் பாம்பாட்டுதல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் கூலி, மீன்பிடி போன்ற தொழில்களில் பஞ்சம், சமூக புறமொதுக்கம் என பல்வேறு சமூகப் பொருளாதார சவால்களை எதிர்கொள்கின்றனர். எனவே இத்தகைய பின்னணியிலிருந்து அப்பழங்குடியினர் தற்காலத்தில் எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதை கண்டறியும் நோக்கோடு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேடுவ சமூகத்தின் தனித்துவ அடையாளத்தினை நிலைநாட்டுவதில் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார மற்றும் கலாசார சவால்களை வெளிக்கொண்டுவருவதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. வேற்று சமூகத்தின் மொழிக் கையாளுகையும், இலங்கையில் வாழும் ஏனைய சமூகத்தினர் மத்தியிலான இடைவினையும், பண்பாடு ரீதியாக ஏற்படுகின்ற மாற்றங்களுமே முக்கியமான காரணங்களாக அமைகின்றது என்பதனை இவ்வாய்வின் கருதுகோல்களாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலக்கிய மீளாய்வு

இலங்கையில் முதன்முதலாக பழங்குடிகள் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டவர்கள் வெளிநாட்டவர்களே ஆகும். கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த C.G.Seligman என்பவரால் 20 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் இலங்கையில் வேடுவர்கள் பற்றிய ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் மூலமாக "The veddas" என்ற நூலினை வெளியீட்டனர். அது நடந்து 100 ஆண்டுகள் கடந்த பின்பே இலங்கையர் அத்தகைய ஆய்வினை முன்வைக்கத் தொடங்கினர். எனினும் ஆதிக் குடிகளாக கருதப்பட்ட வேடர் குழுவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை (குபாலன், 2000).

*Varghese (2002)* என்பவர் "*The Socio – Economic Development of Tribals in Kerala with Special reference to Wayanal Disrict.*" எழுதிய ஆய்வுக் கட்டுரையில் பழங்குடிகள் மற்றும் அபிவிருத்தி ஆகிய எண்ணகருக்களை விபரிப்பதுடன் பழங்குடிகள் பற்றிய அணுகுமுறைகள், இந்தியாவிலுள்ள பழங்குடியின் அபிவிருத்திக்காக அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்வு இந்தியாவை மையப்படுத்தியதாக அமைவதுடன் இலங்கையையோ இங்குள்ள வனக்குறவர்களையோ பற்றியதாக அமையவில்லை.

*Lalita, "Prasad, Binay Kumar Rai(1976) The Tribal Culture of India"* எனும் நூலில் இந்தியாவில் காணப்படும் பழங்குடியினர் பற்றியும் அவர்களின் சமூக, பொருளாதார, அரசியல் மத

நம்பிக்கைகள், கலை கலாசாரங்கள், பாரம்பரியங்கள் தொடர்பாக விபரண முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் இந்தியாவை மையப்படுத்தியதாக அமைகின்றதே தவிர, இலங்கை தொடர்பாக குறிப்பிடப்படவில்லை.

குகபாலன். கா (2000) என்பவரால் எழுதப்பட்ட "இலங்கை பழங்குடிகள்" என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் வனக் குறவர்களின் வாழ்வியல், வனக் குறவர்களின் பரம்பல், மொழி தொடர்பாகு ஆராயப்பட்டுள்ளது. குலசேகரன்.இ (2002) என்பவரால் "இலங்கையின் அலிக்கம்பை வனக் குறவர்களும் வாழ்க்கை முறையும்" எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் அலிக்கம்பை கிராம வரலாறு, அலிக்கம்பை மக்களின் பாரம்பரியம், கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் என்பன தொடர்பான விளக்கங்கள் பெறப்பட்டுள்ளன.

மப்றூக் (2011) என்பவரால் "இலங்கை அலிகம்பை வனக்குறவர் கவனிக்கபடாத சமூகம்" எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் அலிகம்பை கிராம வரலாறு மக்களின் பழக்க வழக்கங்கள் மொழி தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. வர்ணகுலசிங்கம் (2013) என்பவரால் எழுதப்பட்ட "கிழக்கிலங்கையில் இடப்பெயர்களுக்குள்ளாகும் மீவை சமூகத்திடையேயான வாழ்வாதார மாற்றங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பளிச்சங்கேணி வாலி மீனவர்கள் தொடர்பான" எனும் தலைப்பிலான ஆய்வின் மூலம் வாழ்வாதார சொத்துக்கள் மற்றும் வாழ்வாதார செயற்பாடுகள் தொடர்பாக விளக்கியுள்ளார்.

### வேடுவர்களின் மொழிப் பரிமாற்றம்

தொடர்பாடல் முறைகளானது மனித வர்க்கத்தின் அளவிற்கு பழமை வாய்ந்தது என்று கூறலாம். ஆதிகாலத்தில் மனிதன் சைகைகள், உடல் அசைவுகள், ஓசைகள், நெருப்பு புகை என்பவற்றின் ஊடாக தமது கருத்துக்கள் எண்ணங்கள் மற்றும் தேவைகளை சக மனிதர்களோடு பரிமாறிக் கொண்டான். பின்னைய காலங்களில் மொழிகள் விரிவாகத் தொடங்கின. முதலில் பேச்சு வடிவம் மட்டுமே பயன்பாட்டில் இருந்த போதிலும் பின்னர் எழுத்து வடிவம் காலத்தின் தேவையுடன் உருவாக்கப்பட்டது. இதனடிப்படையில் தொடர்பாடல் என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாத விடயமாகும். தற்போது இலங்கையில் வாழும் ஆதிக்குடிகளின் வாழ்க்கை முறையானது சாதாரண மக்களின் வாழ்க்கை நிலையிலிருந்து மாறுபட்டதைப் போன்று அவர்களது மொழியும் மாறுபட்டதாகவே காணப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் மொழியியலாளர்கள் வேடுவ மொழியானது சிங்கள மொழியின் பேச்சு வழக்கு மொழியா? அல்லது வேறு மொழியா? என ஐயப்பட்டனர். 1959ஆம் ஆண்டு முறையான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்ட போது வேடுவ மொழியானது "கிரியோஸ்" மொழியென்றும், இம் மொழியானது தம்பனவில் உள்ள பழைய மொழிகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்றது எனவும் அறிந்தனர்.

மேலும் வேடுவ மொழியின் தாய்மொழி அறியப்படவில்லை, எனினும் சிங்கள மொழியின் தாய்மொழி இந்திய-ஆரிய மொழிகள் என அறியப்பட்டது. வேடுவ மொழியில் சொற்களின் வகையானது பெயர்ச்சொல், வினைச்சொல் மற்றும் உயர்திணை சொற்கள், பால் வித்தியாசத்தில் பயன்படுத்தப்பட்டன. சுய அடையாளம் தேடும் வேடுவர்கள் சிலருக்கு சில வார்த்தைகள் மற்றும் வாக்கியங்கள் மட்டுமே தெரிந்தபோதும் இம்மொழியை செவ்வனே கற்றவர்களும் இருந்தனர். குறிப்பாக இலங்கை கிழக்கு கரையோர பகுதியில் வசிக்கும் இவ்வின மக்களின் சில குழுக்கள் தமிழ் போன்ற ஒரு மொழி பேசுகின்றார்கள். இவர்கள் பேசும் மொழி ஆரிய மொழி இல்லை ஆனால் ஆரிய மொழிகளின் சாயல் அண்மைக்காலமாக இவர்களது பேச்சில் கலந்துள்ளது என மொழியிலாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக வேடுவ மொழி சார்ந்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய இலங்கையின் ரதுகல பகுதியைச் சேர்ந்த வேடுவர்களின் மொழி பற்றிய வரலாறு. அதற்கான சான்றுகள், தற்காலத்தில் அவர்களின் மொழி பயன்பாடு எவ்வாறு உள்ளது மற்றும் பழங்குடியினர்களின் மொழியியல் தேவைகள்

பற்றிய விபரங்களை நேர்காணலின் ஊடாக அறிய முடிந்தது.

அந்தவகையில் இலங்கையின் பிபிலை - ரதுகல பகுதியில் வசிக்கக்கூடிய வேடுவர்களின் தலைவர் சூதாவன் நீலத்தோ அவர்கள் வேடுவ மொழி பற்றிய பல விடயங்களை கூறினார்.

வேடுவ மொழி தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில் தற்போது ரதுகல பகுதியில் வசிக்கும் இவர்களின் பரம்பரை தானிகல என்ற பிரதேசத்தில் வசித்ததாகவும் 1938லும் ஆண்டு காலப்பகுதியிலேயே பிபிலை ரதுகல பகுதியில் தம்மை பதிவு செய்து கொண்டதாகவும் குறிப்பிட்டார். தானிகல பிரதேசத்தில் வசிக்கும் போது அவர்களுக்கு வேடுவ மொழி மாத்திரமே தெரிந்தது. பின்னர் ரதுகல பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து அங்குள்ள சிங்கள மக்களுடன் இணைந்து வாழ ஆரம்பித்த பின்னரே அவர்கள் சிங்கள மொழியைக் கற்றுக் கொண்டதாகவும் அதற்கு முன்பு வேடுவ மொழியில் மாத்திரமே உரையாடியதாக குறிப்பிட்டார்.

ரதுகல பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்த போது அவ் வேடுவர்களையும் அவர்களுடைய வாழ்க்கை முறையையும் பார்வையிட பல சுற்றுலா பயணிகள் வருகை தத்துள்ளனர். இதன்போது ரதுகல பிரதேசத்தில் குறித்த காலத்தில் கிராம சேவகராக பணிபுரித்தவர் வேடுவர்களுடைய மொழியை கற்று அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுடனும், வேடுவர்களுடனும் உரையாடலை மேற்கொண்டு கருத்துக்களை பரிமாறிக்கொள்ள உதவியுள்ளார்.

இவ்வாறாக ரதுகல பிரதேசத்தில் வசிக்கும் வேடுவர்கள் சிங்கள மக்களுடன் உரையாடல்களை மேற்கொண்டு காலப்போக்கில் சிங்கள மொழியை கற்றுக் கொண்டுள்ளனர். மேலும் சாதாரண சிங்கள மக்களைப் போன்று தற்போது சரளமாக சிங்கள மொழியைப் பேசுகின்றனர். தொடர்ந்து அவர் தமது மொழி பற்றி கூறுகையில் ஆரம்பத்தில் வேடுவ மொழியை சிங்கள மொழியாகவே கருதினார்கள் ஆனால் இவ் வேடுவ மொழி சிங்கள மொழியின் சாயலோடு அதன் ஒலியியல் உருப்பியல் அடிப்படையில் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது.

மேலும் இவ் வேடுவ மொழியில் எழுந்துருக்கள் இல்லை சில குறியீடுகளை மாத்திரமே பயன்படுத்தி தமது மொழி சார்ந்த விடயங்களை ஆவணப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார். மேலும் வேடுவ மொழியில் இத்தனை சொற்கள் தான் உள்ளன என்ற அளவீடுகள் எதுவும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

ரதுகல பிரதேசத்தில் வசிக்கும் வேடுவர்களின் வாழ்க்கை முறை சாதாரண மக்களின் வாழ்க்கை முறை போன்று தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள், நீர் வசதி என்பவற்றோடு அவர்களின் பிள்ளைகளுக்கான கல்வி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பிரதேசத்தையும் குகை மற்றும் குடிசைகளை “ஆதிவாசி மக்கள் உரிமை மத்திய நிலையம்” என ரதுகல பிரதேசத்தில் சுற்றுலா பயணிகள் பார்வையிடும் இடமாக மாற்றி அமைத்துள்ளனர். குறித்த இடத்தில் இவர்கள் பயன்படுத்திய பொருட்கள், கல்வெட்டுக்கள், அவர்களின் பரம்பரை மற்றும் உரிமைகள் பற்றிய நூல்கள், காட்சிப்படங்கள், வாழ்க்கை முறை பற்றிய புகைப்படங்கள் மற்றும் மொழி பற்றிய ஆவணங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ் ரதுகல பிரதேசத்தில் வசிக்கும் வேடுவர்களின் தலைவர் அவர்களின் மொழிப்பற்றி தொடர்ந்து பேசுகையில் எமது பிள்ளைகள் சிங்களப் பாடசாலைகளில் தற்போது சிங்கள மொழியில் கல்வி கற்கின்றனர். ஆனால் பாடசாலை தவிர எமது பகுதிகளில் வேடுவ மொழியிலேயே உரையாடல்களை மேற்கொள்வர்.

எமது பிள்ளைகளுக்கு தொடர்ந்து எமது வேடுவ மொழியை கற்றுக் கொடுக்கின்றோம். அதுமட்டுமன்றி இங்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளும் அயல் பிரதேசங்களில் வசிக்கக்கூடிய சிங்கள மக்களுக்கும் எமது மொழியை பயிற்றுவிக்கின்றோம். எமது பிரச்சினையை தேவைகளை அனைவருக்கும், அரசாங்கத்திற்கும்

வெளிப்படுத்துவதற்கும் சகமனிதர்களுடன் நல்லுறவை பேணி கொள்வதற்கும் சிங்கள மொழியை நாம் கற்றுக் கொண்டோம்.

மேலும் எமது இனத்தவரோடு வேடுவ மொழி மூலமே உரையாடல்களை மேற்கொள்வோம். அதற்கு காரணம் வரலாற்றில் மட்டுமே பேசப்படும் ஒரு மொழியாக எமது வேடுவ மொழி மறுவிச்செல்வதை நாங்கள் விரும்பவில்லை தமது மொழி பற்றிய சில விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

இதனடிப்படையில் மொழியியலாளர்கள் கூறுவதைப் போன்று வேடுவ மொழி எனப்படும் “வெத்தா” எனும் மொழி சிங்கள் மொழியின் சாயலுடன் காணப்படுகின்றதே அன்றி அது சிங்கள மொழி அல்ல. மேலும் இவ் வேடுவ மொழி ஒலியியல் மற்றும் உருப்பணியியல் அடிப்படையில் வேறுப்பட்டதாகவே காணப்படுகின்றது. சொற்களின் அளவுகள் எதுமின்றி குறியீடுகளாகவே பயன்படுத்தப்படுகின்றது. சாதாரண மனிதர்களைப் போன்று இவ் வேடுவ மக்களும் தமது மொழி மீது அதீத பற்று கொண்டு வாழ்கின்றனர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இதனடிப்படையில் “வாரகா” அல்லது “பேட பசாவா” என்று அழைக்கப்படும் வேட மொழி, வேடர் மக்களால் பேசப்படும் முதன்மையான பூர்வீக மொழியாகும். இளைய தலைமுறையினர் நாட்டின் ஆதிக்க மொழிகளான சிங்களம் அல்லது தமிழை அதிகளவில் ஏற்றுக்கொள்வதால் இந்த மொழி வேகமாக மறைந்து வருகிறது. பழங்குடி மக்களுக்கும் அண்டை சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கும் இடையிலான பல நூற்றாண்டுகளின் தொடர்பு மற்றும் தொடர்பு மூலம் உருவான ஒரு படைப்பாக்க மொழி வடிவமாக வாரகா கருதப்படுகிறது.

மொழியியல் ரீதியாக, வாரகா சிங்களம் மற்றும் தமிழ் இரண்டிலிருந்தும் குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் காட்டுகிறது. ஆனால் வேடர் மக்களின் தனித்துவமான கலாச்சார அனுபவங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தழுவல்களை பிரதிபலிக்கும் தனித்துவமான அம்சங்களைப் இவை பராமரிக்கிறது. குறிப்பாக வேட்டை, சேகரிப்பு, வன வழிசெலுத்தல், மருத்துவ தாவரங்கள் மற்றும் பாரம்பரிய வேடர் வாழ்க்கையின் மையமான ஆன்மீக நடைமுறைகள் தொடர்பான சிறப்பு சொற்களஞ்சியத்தை இந்த மொழி கொண்டுள்ளது. இந்த சிறப்புச் சொற்கள் பெரும்பாலும் இலங்கையின் பிரதான மொழிகளில் நேரடி சமமானவைகளைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அவை காடுகளில் வாழும் சமூகங்களுக்கு மட்டுமேயான குறிப்பிட்ட சுற்றுச்சூழல் அறிவு மற்றும் கலாச்சார நடைமுறைகளை விவரிக்கின்றன.

### இலங்கை வேடுவர் சமூகத்தின் பண்பாட்டம்சங்கள்

*சமூகநிலை*

வேடர்கள் நீர் நிலைகளை அண்மித்து வேட்டையாடல், மீன்பிடி, சேனைப் பயிர்ச்செய்கை போன்ற தொழில்களைச் செய்துள்ளனர். வேட்டையாடலின்போது பொறிவைத்தல், சுருக்கு வைத்தல், படுகுழி வைத்தல், வில்லம்பு கொண்டு எய்தல் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று மீன்பிடிப்பதற்கு நஞ்சடித்தல், கெந்து மிதித்தல், நீர்கட்டி இறைத்தல், பறி வைத்தல், ஆமை குத்துதல், கரப்பு குத்துதல் போன்ற முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர். தேன் எடுத்தலின்போது தேனீக்கள் தாக்காதவாறு மந்திரங்களையும், உத்திகளையும் கையாண்டுள்ளனர். திருணமானது கபுறா என்ற தலைவனின் கீழ் இடம்பெறும். சீதனமாக கத்தி, கோடரி வேட்டைநாய், பதிய குடிமை என்பன வழங்கப்படும். தற்காலத்தில் தமிழர்களின் மரபான கலத்தில் போடலும் கலப்புற்றுள்ளது. வேடர்களிடையே ஒருவர் இறந்து விட்டால் அவர் தெய்வ நிலையை அடைத்துவிட்டார் என்ற நம்பிக்கையுண்டு. இவர்களிடையே காணப்படும் “உத்தியாக்கள்” வழிபாடு தக்க சான்றாகும்.

குறிப்பாக இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு தேசத்தில் “வேடவேளாளர்” வாகரைப் பிரதேசத்தில் “வெள்வேடர்” போன்ற சமூகப் பிரிவுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் பரம்பரை வேடர்களாகவிருந்து காலப்போக்கில் வேளான் தொழிலை மேற்கொண்டவர்களென

சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். வேடவோன சமூகத்தின் திருமண உறவுகள் வேளான சமூகம் சார்ந்து அடைந்திருப்பது வேட வேளாளர் பிணைப்பை எடுத்துக் காட்டுகின்றது. மண்டூர், வெல்லாவெளி, பழுகாமம், கொக்கட்டிச்சோலை, சித்தாண்டி போன்ற கிராமங்களில் இதன் இறுக்கத்தை இன்றும் உணரமுடிகின்றது.

### இடப்பெயர்களில் வேடர் செல்வாக்கு

இலங்கையின் பல பிரதேசங்களின் இடப்பெயர்களும் வேடத் தலைவர்களின் பெயர்களைக் கொண்டதாக மாற்றங்கண்டுள்ளது. கிழக்கிலங்கையின் சில பதிகளில் பழுவன் என்ற வேட தலைவன் பாழுவன்கமத்தை அமைத்ததாகவும் இப்பெயர் காலப்போக்கில் பழுகாமம் எனத் திரிபடைந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. கழுவன் என்பவனால் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களாக களுதாவளை, களுவாஞ்சிகுடி என்பன காணப்பட்டன. புலியன் என்பவன் வாழ்ந்த இடம் புளியந்தீவு எனப்பட்டது. மஞ்சன் வாழ்ந்த இடம் மஞ்சந்தொடுவாய் எனவும் இங்கு சேனை செய்த இடம் சேனைத்தெரு எனவும் அழைக்கப்படுகின்றது. கங்கன் இருந்த இடம் காங்கேயனோடை காத்தான் இருந்த இடம் காத்தான் குடியிருப்பு, அலையன் வாழ்ந்த இடம் அலையன்குளம், ஆணையன் வாழ்ந்த ஆணைக்குளம், துரும்பன் இருந்த இடம் துரும்பங்கேணி வெறியன் வாழ்ந்த இடம் வெறியன்சேனை என வேடர்களின் பெயரை நினைவுபடுத்துகின்றது.

ஓட்டமாவடியை அடுத்துள்ள பிரதேசம் வேடர்குடியிருப்பு என அழைக்கப்படுகின்றது. குறிஞ்சி நில வேடர் கூட்டமாக வாழ்ந்த குடியிருப்புக்களை குறிஞ்சியென அழைத்தனர் மட்டக்களப்பில் ஏறாவூர், களுதாவளை போன்ற கிராமங்களில் முதலாம் குறிச்சி, இரண்டாம் குறிச்சி, மூன்றாம் குறிச்சி என்பன இன்றும் இப்பகுதிகளில் வழக்கிலுள்ளன.

### கலாசாரமும் சடங்கு முறைகளும்

இயற்கையோடு இணைந்து வாழப்பழகிப்போன இவர்கள், இயற்கையையே தன் கடவுளாக வழிபட்டு வருகின்றனர். தங்கள் தெய்வங்களுக்கு காட்டில் கிடைக்கும் காய்கள், கனிகள், தூப வகைகள், தீபங்கள், பூக்கள் என்பவற்றை பயன்படுத்தி வருகின்றனர். தமது பாரம்பரிய ஆயுதங்களான ஈட்டி, வில், அம்பு முதலியவற்றுக்கு வழிபாடுகளின் போது மரியாதையை செலுத்திவருகின்றனர். வேடுவ சடங்குகளில் 'பாட்டுக்காரர் கொட்டு' எனப்படும் வாத்தியங்கள் வாசிக்கும் பறைக்காரன், கபுறன என்பவர்களுக்கு முக்கிய இடமுண்டு. இவர்களின் சடங்குகளின் போது மூதாதையர்களுக்கு முதல் மரியாதை செய்யப்பட்ட பின்னைரே தெய்வங்களை அழைத்து வழிபடுகின்றனர்.

வேடர்கள் இலிங்கம், வேல் வைத்து வழிபட்டதாக ஐதிகம் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. இலங்கையின் கிழக்கு மாகாணங்களில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், மாமாங்கேஸ்வரர். மண்டூர் கந்தசுவாமி ஆலயம், சித்தாண்டி முருகன் ஆலயம், பழுகாம் விஷ்ணு ஆலயம் போன்றவற்றில் வேடர்களுக்கென்று வேட்டைத் திருவிழா, பூஜைகள் இடம்பெறுகின்றன. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலயத்தில் இடம்பெறும் கஞ்சிமுட்டி வழங்கும் நிகழ்வில் வேடர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மயில் கட்டுத் திருவிழாவானது வேடர்களையும் குமார தெய்வத்தையும் தொடர்புபடுத்துவதாக சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலில் 12 ஆம் நாள் திருவிழாவாக இடம்பெறுகின்றது. இதன்போது கோராவெளி, தரவைப்பகுதிகளில் வாழும் வேட குலத்தவர்கள் வாழைக்குலைகள், தேன், பச்சையரிசி, காய்கறிகள், மயிலிறகுக் கட்டுக்களையும் கொண்டுவருவர். மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் சுவாமி வீதி வலம் வரும் நிகழ்வின்போது வேடர் ஒருவர் கையில் வில்லம்பு ஏந்தியவாறு சுற்றுமுற்றும் பார்த்தவண்ணம் முன்னால் வருவார். மட்டக்களப்பு திராய்மடு வீரபத்தினியம்மன் ஆலயத்தின் பூஜைகள், மந்திரங்கள் என்பன வேட முறைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. வேடர் குல வழிபாடாக குமார தெய்வ வழிபாடு தீவிட காலமாக இடம்பெற்றிருக்கின்றது.

கரடித் தெய்வம், மாறாத்தெய்வம் முதலியன

இவர்களின் முக்கிய தெய்வங்களாகும். இவை தவிர இவர்களின் பிறப்பு, இறப்பு, திருமணம் மற்றும் ருதுவாதல் போன்ற எந்தவொரு சடங்களும் முதாதயர்களின் பாரம்பரிய சம்பிரதாயங்களையே இன்னமும் கடைபிடித்து வருகின்றனர். இவர்களின் நம்பிக்கையில் காகம் கரைதல், கிளி தலை கீழாக தொங்குதல், பறவைகள் ஒலியெழுப்புதல், தும்மல், நாய்கள் பதறி போய் குரைத்தல், மனைவியின் பொட்டு அழித்தல் போன்ற சம்பவங்கள் நிகழும் போது தாம் நினைத்தவைகள் நடைபெறாது என இவர்களால் நம்பப்பட்டு வருகின்றது.

வேடுவ மக்கள் ஒரு சிக்கலான ஆன்மீக உலகக் கண்ணோட்டத்தைப் பராமரிக்கின்றனர் என்றே கூற வேண்டும். அங்கு இயற்கை கூறுகள் உணர்வு மற்றும் தெய்வீக இருப்புடன் நிறைவுற்றுள்ளன. குறிப்பாக அவர்கள் "கண்டே யகா" (மலை ஆவி) அவர்களின் முதன்மை தெய்வங்களில் ஒன்றாக வணங்குகிறார்கள். அத்தெய்வம் வன வளங்களைப் பாதுகாப்பதாகவும் வேட்டை வெற்றியை உறுதி செய்வதாகவும் நம்புகிறார்கள். சிறப்பு மந்திரங்கள் மற்றும் சடங்கு இயக்கங்களைப் பயன்படுத்தி தலைமுறைகள் வழியாக அனுப்பப்படுகிறார்கள்.

வேட்டைப் பயணங்களுக்கு முன் வேட்டைக்காரர்கள் "கிரிகோரஹா" விழாக்களை நடத்துகிறார்கள். விலங்குகளை அழைத்துச் செல்ல அனுமதி கோருவதற்காக ஆவிகளுக்கு பால் சோறு வழங்குகிறார்கள். குறிப்பிட்ட மரங்கள், பாறைகள் மற்றும் நீர் ஆதாரங்கள் பாதுகாவலர் ஆவிகளின் வீடுகளாகக் கருதப்படுகின்றன. இவற்றை அவர்கள் பயபக்தியுடன் அணுகுகின்றனர். இச்சமூகத்தியர் இந்த இடங்களில் வெற்றிலை அல்லது தேன் போன்று சிறிய பிரசாருங்களை விட்டுச் செல்லலாம். இந்த ஆன்ம அமைப்பு ஆழமாக வேரூன்றிய சுற்றுச்சூழல் கண்ணோட்டத்தை இங்கு பிரதிபலிக்கிறது. அங்கு மனிதர்கள் இயற்கையிலிருந்து தனித்தனியாகவோ அல்லது ஆதிக்கம் செலுத்தவோ அல்ல, மாறாக அதன் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறார்கள்.

### வேடுவர்களின் மருத்துவம்

வேடுவ சமூக மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை காட்டில் இருந்தே பெற்று வாழ்வாதாரத்தை பூர்த்திசெய்து வந்துள்ளனர். காடுகளில் கிடைக்கக்கூடிய மூலிகைகளை பயன்படுத்தி கிடைக்ககூடிய மருந்து வகைகளை தங்கள் நோய்களுக்கு பயன்படுத்தி கொள்கின்றனர். மருத்துவம் செய்பவர்களை 'பரிகாரி' என்று இவர்கள் அழைக்கின்றனர். இவர்களின் மருத்துவ முறைகளை வெளிநபர்களுக்கு சொல்வதில்லை, காரணம் இவர்களின் இனம் சாராதவர்களுக்கு அம்முறைகளை கறினால் இவர்களின் மருத்துவ முறை பலிக்காது என வேடுவ இன மக்களால் நம்மப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இயற்கையோடு இணைந்த வாழ்வியல் முறைகளை கொண்டிருந்த இவர்களின் வாழ்வில் நவீன நாகரிகத்தின் வருகை, நரகமயமாக்கல், மக்கள் குடியேற்றம் காரணமாக இவர்களின் இருப்பிடமாக காணப்பட்ட காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. வேட்டையாடுதல், காட்டுத்தேன் எடுத்தல் போன்றவற்றிற்கு அரசாங்கம் தடைவித்துள்ள காரணத்தால் இவர்களின் பாரம்பரிய தொழில்களை கைவிட்டு தற்போது விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்ளை செய்து வருகின்றனர். இந்த நவீனமயமாக்கள் காரணமாக இவர்களின் பாரம்பரிய கலாசார முறைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

### வேட்டைக்காரர் பாரம்பரியம்

பல சமகால வேடர் சமூகங்கள் விவசாயத்தை ஏற்றுக்கொண்டாலும், பாரம்பரிய வாழ்வாதார திறன்கள் கலாச்சார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவை. வேடர் வேட்டைக்காரர்கள் குறிப்பிடத்தக்க கண்காணிப்பு திறன்களை வெளிப்படுத்துகிறார்கள். பயிற்சி பெறாத கண்களுக்குத் தெரியாத தாவரங்கள் அல்லது மண்ணில் உள்ள நுட்பமான இடையூறுகள் மூலம் விலங்கு பாதைகளை அடையாளம் காண்கிறார்கள். அவற்றின் திறன்களை ஆராய்வதன் மூலம் அவர்கள் மான் இனங்களை வேறுபடுத்தி அறிவதோடு, ஒரு விலங்கு எவ்வளவு சமீபத்தில் கடந்து சென்றது என்பதை

தீர்மானிக்க முடியும் என்கின்றனர்

இவர்களிடம் தேன் சேகரிப்பு ஒரு சிறப்புத் திறமையாக உள்ளது. அனுபவம் வாய்ந்த சேகரிப்பாளர்கள் தேனீக்களின் பறக்கும் முறைகளைப் பின்பற்றி காட்டு விதானங்களில் உயரமான தேன்கூடுகளைக் கண்டுபிடிக்க முடிவதோடு, தேனை அறுவடை செய்யும் போது தேனீக்களை அமைதிப்படுத்த புகை உற்பத்தி செய்யும் பொருட்களைப் பயன்படுத்துகிறார்கள். காட்டு மருத்துவ தாவரங்கள் மற்றும் பருவகால பழங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி முறைகள், இலை வடிவங்கள் மற்றும் குறிப்பிட்ட மணி வகைகள் அல்லது பிற தாவரங்களுடனான உறவின் அடிப்படையில் வகைப்படுத்தும் அறிவைப் பயன்படுத்தி இவை அடையாளம் காணப்படுகின்றன. முறையான அறிவியல் கட்டமைப்புகளுக்கு வெளியே உருவாக்கப்பட்ட ஒரு அதிநவீன தாவரவியல் வகைப்பாட்டை இவை நிரூபிக்கிறது.

**முடிவுரை**

இலங்கையின் பழங்குடி சமூகமான வேடுவர் சமூகமானது ஏனைய மக்கள் பிரிவிலிருந்து வித்தியாசமான வாழ்க்கை முறை, சடங்கு சம்பிரதாயங்களை பின்பற்றுகின்ற வாழ்வியலைக் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இம்மக்கள் தமக்கேயுரித்தான சடங்கு சம்பிரதாயங்களில் விலகாமல் இருப்பிலும் கூட பிரதான சமூகத்திலிருந்து புறமொதுக்கப்பட்டுள்ளனர். அத்துடன் தமது தனித்துவத்தினைப் பேணிப் பாதுகாப்பதிலும் சமூகத்தில் தமக்கான அந்தஸ்தினை பெறுவதிலும் முறையான குடியிருப்பின்மை, தூய்மையற்ற குடிநீர், நிரந்தர மலசலகூடமின்மை, வசதி குறைந்த வகுப்பறைகள், போதிய ஆசிரியர்களின்மை, இலகுவில் நோய்த்தாக்கங்களுக்குள்ளாதல், மின்சார வசதியின்மை, சீரற்ற பாதைகளும் முறையற்ற போக்குவரத்து வசதிகளும், போதைப் பொருள்பாவனை, மிருகங்களின் அச்சுறுத்தல் போன்ற பலதரப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது ஆய்வுத்தரவுகளினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக தமது மொழியில் கல்வி கற்க முடியாமை இங்குள்ள மாணவர்களின் எதிர்காலத்தினை கேள்விக்குறியாக்கியுள்ளது. பிரதான சமூகத்தவருடன் இணைந்து செயலாற்றுதல் என்பது இம்மக்களுக்கு பாரியதொரு அச்சுறுத்தலாக உள்ளது. ஏனெனில் இவர்கள் வனக்குரவர்கள் என்கின்ற அடையாளத்தினால் ஏனைய சமூகங்களினால் புறமொதுக்கப்பட்டுள்ளனர். இதற்கு வறுமையும் மிகப் பெரும் காரணமாகும். இம்மக்கள் இந்நாட்டின் பாரம்பரிய மரபுரிமைகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றனர் என்பதை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் நன்குணர்ந்து அம்மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியான சவால்களை வெற்றி கொள்வதற்கான வசதிகளையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் இவ்வாறான ஒரு சமூகமே இலங்கையின் வரலாற்றிலிருந்து நீக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது. இன்று வேடுவர் சமூகத்தின் மொழி அபத்தில் உள்ளமையை அவதானிக்க கூடியதாக உள்ளது. பழங்குடி சமூகங்கள் பிரதான சமூகத்துடன் ஒருங்கிணைக்க அழுத்தத்தை எதிர்கொள்வதால் இளைய தலைமுறையினர் சிங்களம் அல்லது தமிழை தங்கள் முதன்மை மொழிகளாக அதிகளவில் ஏற்றுக்கொள்கிறார்கள். காடழிப்பு, மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மாறிவரும் பொருளாதார முறைகள் காரணமாக தனித்துவமான மொழியியல் மரபுகளைத் தக்கவைத்த பாரம்பரிய காடுகளில் வாழும் வாழ்க்கை முறைகள் குறைந்த சாத்தியமானதாகி வருகின்றன.

இன்று நாகரீக வளர்ச்சி காரணமாக இவ்வேட சமூகத்தினரின் பாரம்பரிய வழக்காறுகள் மறைந்து வருகின்றன. நாகரிக மாற்றம் ஏற்பட்டபோதிலும் ஏனைய சமூகத்தினருடன் ஒப்பிடுகையில் இவர்கள் பின்தங்கிய சமூகத்தினராகவே காணப்படுகின்றனர். வேடர் மொழியை ஆவணப்படுத்திப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு முயற்சிகள் சமீபத்திய தசாப்தங்களில் உருவாகியுள்ளன. மொழியியல் ஆராய்ச்சியாளர்கள், கலாச்சார

மானுடவியலாளர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் சொல்லகராதி, இலக்கண முறைகள் மற்றும் வாய்வழி மரபுகள் முற்றிலுமாக மறைந்து போவதற்கு முன்பு அவற்றைப் பதிவு செய்ய பணியாற்றி வருகின்றனர். இளைய சமூக உறுப்பினர்கள் தங்கள் மொழியியல் பாரம்பரியத்துடன் மீண்டும் இணைவதற்கு அனுமதிக்கும் கல்விப் பொருட்களை உருவாக்குவதில் சில முயற்சிகள் கவனம் செலுத்துகின்றன. பல சமூக உறுப்பினர்கள் இப்போது சிங்களம் அல்லது தமிழ் மொழியைப் பேசினாலும், சில வேட வார்த்தைகள், சொற்றொடர்கள் மற்றும் பேச்சு முறைகள் கலாச்சார அடையாளத்தின் அடையாளங்களாகப் பராமரிக்கப்படுகின்றன. குறிப்பாக, சடங்கு மொழி, தற்போதைய தலைமுறைகளை முதாதையர் மரபுகளுடன் இணைக்கும் பழைய மொழியியல் வடிவங்களைப் பாதுகாக்கிறது.

வேட சமூகங்களுக்கு அப்பால், இலங்கை வரலாற்று ரீதியாக பிற சிறிய பழங்குடி குழுக்களுக்கு தாயகமாக இருந்து வருகிறது. ஒவ்வொன்றும் தனித்துவமான பேச்சுவழக்குகள் அல்லது மொழி வகைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் கடலோர பழங்குடி சமூகங்கள் மற்றும் உட்புற வளக் குழுக்கள் அடங்கும். அவை அவற்றின் குறிப்பிட்ட சுற்றுச்சூழல் இடங்கள் மற்றும் கலாச்சார நடைமுறைகளுக்கு ஏற்றவாறு உள்ளூர்மயமாக்கப்பட்ட பேச்சு வடிவங்களை உருவாக்கின.

இந்த பூர்வீக மொழிகளின் ஆய்வு, இலங்கையின் காலனித்துவத்திற்கு முந்தைய வரலாறு மற்றும் தீவின் மாறுபட்ட சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு மனிதர்கள் தழுவிக்கொண்ட பல்வேறு வழிகள் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குகிறது. பழங்குடி மொழிகளிலிருந்து வரும் மொழியியல் சான்றுகள், எழுதப்பட்ட பதிவுகள் தொடங்குவதற்கு முன்பு தீவின் மனித வரலாற்றை வடிவமைத்த இடம்பெயர்வு முறைகள், கலாச்சார பரிமாற்றுங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தழுவல்களைப் புரிந்துகொள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுகின்றன.

இலங்கையில் பழங்குடி மொழிகளின் சரிவு, உலகளாவிய பூர்வீக மொழி இழப்பின் வடிவங்களை பிரதிபலிக்கிறது. அங்கு உலகளவில் ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் தோராயமாக ஒரு மொழி மறைந்துவிடும். இந்த மொழியியல் அழிவு, தகவல் தொடர்பு அமைப்புகளின் இழப்பை மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதனால் குறிப்பிட்ட தழல்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்ட தனித்துவமான அறிவு அமைப்புகள், சுற்றுச்சூழல் ஞானம் மற்றும் கலாச்சாரக் கண்ணோட்டங்களின் அரிப்பையும் குறிக்கிறது.

இலங்கையின் பழங்குடி மொழிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றன. இதில் குறைந்த எண்ணிக்கையிலான சரளமாகப் பேசுபவர்கள். வரையறுக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் இளைய தலைமுறையினரை பாரம்பரிய வாழ்க்கை முறைகளிலிருந்து விலக்கும் மாறிவரும் சமூகப் பொருளாதார நிலைமைகள் ஆகியவை அடங்கும். இருப்பினும், பூர்விக அறிவு அமைப்புகளின் கலாச்சார மற்றும் அறிவியல் மதிப்பை அங்கீகரிப்பது, மொழியியல் ஆவணங்களை கலாச்சார மறுமலர்ச்சி திட்டங்களுடன் இணைக்கும் மொழி பாதுகாப்பு முயற்சிகளில் புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

## References


Srenivasasharma, K. (1978), *Varikkuravap Plangudip Makkal*. Anaithinthiya Thamil Moliyiyal Kalagam.

Kugapalan, K. (2000). *Ilangai Palangudikal Vanakuravar Valviyal Aivu*. Paranar Associate Pvt Ltd.

Kulasegaran, E. (2002). *Alikampai Vanakuravargalum Valkai Muraiyum*.

Pakthavasthala Barathi, C. (1996). *Panpaddu Madidaviyal*. Manivasagar Publication.

Mafrok. (2011). *Alikampai Vanakuravar Kavanikapadatha Samugam*.

Varnakulasingam,M.(2013).*KilakilangaiyilIdapeyarvugalukullakapadum Minava Samugathinaridayeyana Valvathara Matrangal Maddakalappu Mavaddathil Panichangeni Vavi Minavargal Thodarpana Oor Ayvu*. Kilakku Palkalaikalagam.

*Alaiyadivempu Prathesa Seyalaga Pulli Vipara Thiraddu*. (2013)

Lalitha Prasad & Binay Kumar Rai. (1976). *The Tribal Culture of India*. India Publishing Company.

Regional Epidemiology Unit. *Dengue Reported Cases from 2006-2016*. Regional Directory of Health Services (RDHS), Kalmunai. 2016

Varghese. (2010). *The Socio Economic Development of Tribals in Kerala with Special reference to Wayanal Disrict*.